# O.S 81/2019 நாள் 01.12.2023

## பிசா2 ஆரோக்கியசெல்வி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் இந்திரா நகரில் வசிக்கிறேன். நான் ஊட்டியில் வசித்தது இல்லை. ஊட்டியில் எனக்கு சொத்து இல்லை. ஊட்டி தாண்டி கூடலூரில் எனக்கு சொத்து இருக்கிறது . வீடு இருக்கிறது. அந்த வீட்டை வாடகைக்கு விட்டிருக்கிறேன். நான் இந்த வழக்கில் பரிகாரம் எதுவும் கேட்கவில்லை. நான் வீட்டுக் குடித்தனம் எனது கணவர் ஏற்கனவே டிரைவராக இருந்தார் தற்போது விவசாயம் செய்கிறார் நெல்லும் கடலையும் போடுவார். விவசாய நிலங்கள் திருவாரூர் மாவட்டம் நத்தகுடி கிராமத்தில் உள்ளது. வண்ணாராப்பேட்டையிலும் உள்ளது. ஏற்றுமதி எதுவும் செய்யவில்லை. 1ம் வாதியை அடைக்கல மாதா கோவிலுக்கு செல்லும் போது எனக்கு தெரியும் அவர் வட்டி தொழில் செய்வதாக அவர் தான் சொன்னார். நானோ என் கணவரோ தொழில் எதுவும் செய்யவில்லை. நானும்என் கணவரும் சேர்ந்து கையெழுத்து போட்டு 1ம் வாதியிடம் ரூ.41,00,000/- கடன் வாங்கியிருக்கிறோம். 07.12.2017 தேதியில் கடன் வாங்கினேன் அப்போது வெற்றுத் தாள்களில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தோம். அவர் வங்கி மூலமாக தொகையை கொடுத்தார் ரொக்கமாக கொடுக்கவில்லை. அவர் வேறு நபர்களின் அக்கௌண்ட் மூலமாக பணம் கொடுத்தார் வேறு நபர் யார் என்று சாட்சி சொல்லும் இந்த நிமிடம் வரை தெரியாது. அவர் வேறு நபர்களின் அக்கௌண்ட் மூலமாக 1ம் வாதி பணம் கொடுத்தார் என எதை வைத்து உறுதி செய்கிறேன் என்றால் 1ம் வாதி அவ்வாறு சொன்னார்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.